### தலிபான் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்: பான் கீ மூன் யோசனை

**நியூயார்க்:** ஆப்கானிஸ்தான் பிரச்சனையில் தீர்வு காண தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் யோசனை தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்ற ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில், உறுப்பினர்களாக உள்ள 15 நாடுகளும் ஐ.நா. பொதுச் செயலாளரின் யோசனை பற்றி விவாதித்தன.

குறிப்பாக ஐ.நா. அமைத்துள்ள ஆப்கானிஸ்தானுக்கான விசேஷக் குழுவின் ஆயுள் காலத்தை மேலும் 12 மாதங்களுக்கு நீடிக்க வேண்டும் என்ற யோசனை விவாதிக்கப்பட்டது. இதன் மீதான வாக்கெடுப்பை அடுத்த வாரம் வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

ஆப்கானிஸ்தானுக்கான விசேஷக் குழுவின் மூலம் ஆப்கானிஸ்தானின் அதிபர் ஹமீத் கர்சாய் தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூக உடன்பாடு காண வேண்டும் என்று பான் கீ மூன் யோசனை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நியமித்துள்ள விசேஷக் குழுவினர் தலிபான்களுடன் அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் பான் கீ மூன் கூறியுள்ளார்.

## ஈரானின் முக்கிய எதிர்க்கட்சிக்கு தடை

**டெக்கரான்:** ஈரானில் சீர்திருத்தங்களைக் கோரும் முக்கிய எதிர்க்கட்சியான இஸ்லாமிய ஈரான் பங்கேற்பு முன்னணி கட்சியை அந்நாட்டு நீதித்துறை தடை செய்துள்ளது.

அக்கட்சியின் அலுவலகங்களும் மூடப்பட்டு விட்டதாக ஈரான் உள்துறை அமைச்சகத்தின் துணை அதிகாரி தெரிவித்தார். சென்ற மார்ச் 11ம் நாள் அக்கட்சி தனது ஆண்டு கூட்டத்தை நடத்துவதாக அறிவித்திருந்தது. ஆனால் அந்தக் கூட்டத்திற்கு அரசு தடைவிதித்தது.

இது ஒரு சட்டவிரோதமான நடவடிக்கை மட்டுமின்றி மக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகும் என்று கட்சி கூறியுள்ளது. சென்ற ஜூன் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் மோசடி நடைபெற்றதாக கூறி சீர்திருத்தங்கள் கோரும் முக்கிய எதிர்க்கட்சிகளின் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து 31 ஆண்டுகாலமாக நடைபெறாத அளவிலான பெரும் கலவரம் ஈரானில் ஏற்பட்டது.

ஜூலை மாதம் இஸ்லாமிய முன்னணி இந்தத் தேர்தல் பற்றிக் குறிப்பிடும் போது இஸ்லாமிய அரசை பாதிக்கும் வகையிலான ஒரு ராணுவப் புரட்சி போன்றது என்று தெரிவித்தது.

வரும் மார்ச் 21ம் நாள் ஈரான் புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கு முன்பாக மேலும் பல எதிர்க்கட்சியினர் ஒரிரு நாட்களில் கைது செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

காவல்துறையினர் புத்தாண்டு நிகழ்ச்சிகளின் பொழுது புதிதாக எதிர்ப்பு பேரணிகளை நடத்தினால் அவர்கள் அனைவரும் கைது செய்யப்படுவார்கள் என்று எச்சரித்துள்ளளனர். ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ள எதிர்க்கட்சியினரில் பலர் விடுதலை செய்யப்பட்டு விட்டாலும் 80 பேர் பதினைந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனை பெற்றுள்ளனர்.

### ரூ.30 லட்சம் கள்ள நோட்டு வைத்திருந்த பாகிஸ்தான் பெண் கைது

**காத்மாண்டு:** ரூ.30 லட்சம் கள்ள நோட்டு வைத்திருந்த பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஒருவரை போலீசார் கைது செய்தனர்.

காத்மாண்டு திருபுவுன் சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கியபோது பாகிஸ்தானை சேர்ந்த மரியம் என்ற 65 வயதான பெண்ணை போலீசார் சோதனையிட்டனர். அவரிடம் 5000 எண்ணிக்கையில் 500 ரூபாய் நோட்டுகளும், 500 எண்ணிக்கையில் 1000 ரூபாய் நோட்டுகளும் அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டது.

மரியம் பாகிஸ்தானிலிருந்து டி.கே.268 விமானம் மூலம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு காத்மாண்டு வந்து சேர்ந்தார். இந்த கள்ள ரூபாய் நோட்டுகள் பிஸ்கெட்டுகள் வைக்கும் அட்டை பெட்டியில் வைத்து துணியால் சுற்றப்பட்டிருந்தது. பாகிஸ்தான் பெண் நேபாளத்திற்குள் நுழைய உதவி செய்ததாக இரண்டு போலீசார் கைது செய்யப்பட்டனர்.

## கிரிக்கெட் சூதாட்டத்தில் பாகிஸ்தான் வீரர்கள்

**லாகூர்:** ஏற்கெனவே பிரச்சனைகளில் சிக்கியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சில முக்கிய வீரர்கள் சூதாட்டத்தில் தொடர்பு கொண்டிருப்பதாக விளையாட்டுத்துறை நிலைக்குழு தெரிவித்துள்ளது. கபார் குரேஷி, தாஹிர் மஷாதி மற்றும் ஹரூன் அக்தார் ஆகிய மூவர் கொண்ட துணைக்குழு பாக். வீரர்கள் தங்களது டவுன் அண்டர் போட்டிகளின் போது சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தது.

எனினும் அதில் ஈடுபட்ட வீரர்களின் பெயர்களை தெரிவிக்கவில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துடன் நிலைக்குழு பேச்சுவார்த்தை நடத்தியபின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆஸ்திரேலியா போட்டிகளில் அணி கலந்து கொண்டபோது அதன் செயல்பாடுகள் பற்றி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தப் பயணத்தின் பொழுது சில வீரர்கள் நடந்து கொண்ட முறைபற்றி ஒலி, ஒளி மற்றும் உறுதியான சான்றுகள் உள்ளதாக செய்தியாளர்களிடம் ஹரூன் அக்தார் தெரிவித்தார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் இந்த விசாரணையை மிகச் சிறப்பாக செய்திருப்பதாக குழு உறுப்பினர் மஷாதி கூறினார். மேலும் சில பிரச்சனைகள் பற்றி விசாரிக்க வேண்டியிருப்பதாலும் இந்தச் சூதாட்டத்தில் கிரிக்கெட் சாராத சிலர் தொடர்பு கொண்டிருப்பதாலும் முழு விசாரணை முடியும் வரை வீரர்கள் பெயரை தெரிவிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

ஒரு வீரர் 50 ரன்கள் எடுக்க முடியும் என்ற நிலையில் 10 ரன்கள் எடுப்பதும் மிக எளிதான பந்துகளைக் கூட பிடிக்காமல் தவற விடுவதும் நடைபெற்றுள்ளதாக மஷாதி கூறினார்.

# சிலி கடலோரப் பகுதியில் மீண்டும் பூகம்பம்



**சாண்டியாகோ:** சிலியின் கடலோரப் பகுதியில் திங்கட்கிழமை இரவு நில அதிர்ச்சி ஏற்பட்டது. இதன் அளவு 6.7 ரிக்டர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சேதாரம் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பசிபிக் கடலில் 21.7 மைல் ஆழத்தில் இந்த நில அதிர்ச்சி ஏற்பட்டது. இது சுனாமியாக உருவாகாது என்று அமெரிக்க நிலவியல் நிபுணர்கள் தெரிவித்தனர். கடந்த பிப்ரவரி 27ந்தேதி ஏற்பட்ட நில அதிர்ச்சியில் 500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 3000 கோடி டாலர் மதிப்புள்ள சொத்துகள் சேதமடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் பிரச்சனை பற்றி சீனா கவலை

**பெய்ஜிங்:** ஈரானின் அணு சக்தி நடவடிக்கைகள் பற்றி உலக நாடுகளின் அச்சத்திற்கு சீனா கவலை தெரிவித்துள்ளது. எனினும் அந்நாட்டின் மீதான தடை பிரச்சனைக்கு தீர்வாகாது என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் யாங் ஜெய்ச்சின் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் உடனான சந்திப்புக்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். பேச்சுவார்த்தையில் ஈரான் முக்கிய ஒன்றாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.



தற்போதைய சூழ்நிலையைப் பற்றி சீனா கவலைப்படுவதாகவும், ஈரானுடன் அமைதிப் பேச்சுவார்த்தை மூலமே பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்று அவர் கூறினார்.

சவுதி அரேபியா, அங்கோலாவுக்கு அடுத்து ஈரான் மூன்றாவதாக எண்ணெய் வழங்கி வருகிறது. சீனாவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் 11.4 சதவீதம் ஈரானிலிருந்து பெறப்படுகிறது.

### இஸ்ரேல், பாலஸ்தீன தலைவர்களுடன் பேச்சுநடத்த அமெரிக்க தூதர் விரைகிறார்

**ஜெருசலேம்:** அமெரிக்காவின் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தூதர் ஜார்ஜ் மிட்செல் இஸ்ரேல், பாலஸ்தீன தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த திங்கட்கிழமையன்று வாஷிங்டனிலிருந்து புறப்பட்டார்.

அமெரிக்கத் தூதர் ஜார்ஜ் மிட்செல் வாஷிங்டனிலிருந்து புறப்பட்டு நேராக மாஸ்கோ செல்கிறார். அங்கு நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையில் மத்திய கிழக்கு நாடுகளின் சமாதான தூதராக இருக்கும் ரஷியா, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, ஐ.நா. ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொள்கிறார்கள். கடந்த 40 ஆண்டுகளாக இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள ஜெருசலேமில் எந்தவிதக் கட்டுமானப் பணியும் நடைபெறவில்லை என்று இஸ்ரேல் அதிபர் நேதன்யாகு நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஜெருசலேமில் ரமாத்ஷிலோமோ பகுதியில் யூதர்களுக்காக 1600 புதிய விடுதிகள் கட்டுவதற்கு அமெரிக்கா கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது. பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேலுக்கு ராணுவ உதவி செய்துவரும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் இஸ்ரேல் கடும் அதிருப்தி அடைந்துள்ளது. அமெரிக்க தூதரின் பேச்சுவார்த்தைக்கு இந்தப் பிரச்சனையில் ஒரு முடிவு காணப்படும் என்று தெரிகிறது.

## இண்டியன் வெல்ஸ் டென்னிஸ் போட்டியில் ஜான்கோவிக், ஜோகோவிக் வெற்றி

**இண்டியன் வெல்ஸ்:** அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள இண்டியன் வெல்ஸ் டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பிய வீராங்கனை ஜெலினா ஜான்கோவிக் இத்தாலியின் சாரா எர்ரானியை 2-6, 7-6, 6-4 என்ற செட்கணக்கில் தோற்கடித்து நான்காவது சுற்றுக்குள் நுழைந்தார்.

எனினும் இந்த வெற்றியைப் பெற அவர் 2மணி 48 நிமிடங்கள் போராட வேண்டியிருந்தது. எர்ரானி 42 தவறுகளே செய்த நிலையில் 6வதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜான்கோவிக் 57 தவறுகளை செய்தார். எர்ரானி உலகின் 9ம் நிலையில் உள்ள வீராங்கனையை துவக்க ஆட்டத்தில் 31 நிமிடங்களில் தோற்கடித்திருந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நோவக் ஜோகோவிக், ஜெர்மனியின் பிலிப் கோல்ஷ் ரீபரை வென்று நான்காவது சுற்றுக்கு நுழைந்தார். அவர் ரீபரை 6-3, 2-6, 7-6 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.





இரண்டாவது செட்டை இழந்த ஜோகோவிக் மூன்றாவது செட்டில் சிறப்பாக ஆடி வெற்றி பெற்றார். இந்தப் போட்டி இரண்டரை மணி நேரத்திற்கு மேல் நடைபெற்றது. சென்ற 2008ம் ஆண்டு இதேபோட்டியில் வெற்றி பெற்று சாம்பியனான ஜோகோவிக் உலகின் இரண்டாம் நிலை வீரர் ஆவார்.

உலகின் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் சென்ற ஆண்டு பிரிட்டனின் ஆண்டி முர்ரேவை இறுதிச் சுற்றில் தோற்கடித்து கோப்பையை வென்றிருந்தார். தற்போது மூன்றாவது சுற்றில் அன்சிக்கை தோற்கடித்து நான்காவது சுற்றுக்கு நடால் முன்னேறி உள்ளார். அடுத்து அவர் அமெரிக்காவின் ஜான் இஸ்னர் அல்லது சாம் குவெர்ரேவை சந்திக்க உள்ளார்.

### பொன்சேகா மீது ராணுவ நீதிமன்றத்தில் விசாரணை

**கொழும்பு:** இலங்கையில் ராணுவத் தளபதியாக பதவி வகிக்கும்பொழுது அரசியலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட சரத் பொன்சேகா மீது ராணுவ நீதிமன்றத்தில் செவ்வாயன்று விசாரணை தொடங்கியது. மேலும் ராணுவத்திற்கான பொருட்கள் வாங்குவதில் முறைகேடாக நடந்து கொண்டதாக குற்றச்சாட்டில் கூறப்பட்டுள்ளது.

தற்பொழுது ராணுவப் பதவியில் இல்லாத ஒருவரை ராணுவ நீதிமன்றத்தில் எப்படி விசாரிக்கலாம் என்று பொன்சேகாவின் கூட்டணிக் கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன. அவர் மீதான ராணுவ நீதிமன்ற விசாரணை சட்டவிரோதமானது என்று மார்க்சிஸ்ட் ஜனதா, விமுக்தி பெரமுனா தலைவர் சோமவம்ச அமரசிங்கே தெரிவித்துள்ளார்.

ராணுவ நீதிமன்ற விசாரணை பற்றி கருத்துக் கூற இலங்கை ராணுவ அதிகாரிகள் மறுத்து விட்டனர்.



பல நாடுகளுக்கிடையே கடந்து செல்லும் பனிச் சறுக்கு மாரத்தானில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான வீரர்கள்.



ரஷியாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள நேவா நதி -5 டிகிரி செல்ஷியஸ் குளிரால் உறைந்து விட்டதால் அதன் மீது பனிச் சறுக்கு செய்யும் ஒருவர்.